# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.84/2025

**Deposition of Witness for Prosecution PW 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சிவக்குமார் | Father's Name | : | நாகராஜ் |
| Village | : | தளிக்கோட்டை காலணி | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 52 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 13th day of March 2026.**

**(A1 to A3, A5, A6 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தளிக்கோட்டை காலணியில் வசித்து வருகிறேன். நான் ஆடியோ மைக் செட் வைத்து தொழில் செய்து வருகிறேன். 15.05.2009 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நானும் கோவிந்தராஜும் நெம்மேலி பாலம் அருகே சென்று கொண்டிருந்தபோது போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள முதல் கையெழுத்துக்கள் என்னுடையவை 2 வது கையெழுத்துக்களை கோவிந்தராஜ் போட்டார். என்னுடைய

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:37:40 +0530

கையெழுத்துக்கள் மட்டும் முறையே **அ.சா.ஆ.9 முதல் அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கையெழுத்து செய்த பேப்பர்களில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. பின் மாலை 5.45 மணியளவில் தளிக்கோட்டை காலணி நெ.8, ஆற்று வாய்கால் வடகரை அருகில் போலீசார் எழுதி வைத்திருந்த 3 பேப்பர்களில் என்னிடமும் கோவிந்தராஜுவிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள முதல் கையெழுத்துக்கள் என்னுடையவை 2 வது கையெழுத்துக்களை கோவிந்தராஜுடையது. என்னுடைய கையெழுத்துக்கள் மட்டும் **அ.சா.ஆ.12 முதல் அ.சா.ஆ.14**. அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 15.05.2009 ம் தேதி நானும் கோவிந்தராஜும் மேலநெம்மேலி பாலம் அருகே வந்து கொண்டிருந்தபோது அறிஞர் துரை, முத்துக்குமார், ராஜா ஆகியோர்களை போலீசார் பிடித்து விசாரித்து அவர்களை கைது செய்தார்கள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:37:48 +0530

எனவும் அவர்கள் தனித்தனியே போலீசாரிடம் மதியம் 2.00 மணி முதல் 3.50 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் எனவும் அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் நான் முதல் சாட்சியாகவும் கோவிந்தராஜ் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம் எனவும் மாலை 5.45 மணியளவில் தளிக்கோட்டை காலணி ஆற்று வாய்கால் வடகரையில் உள்ள காட்டாமணியிலிருந்து அறிஞர்துரை என்பவரிடமிருந்து இரும்பு கம்பி ஒன்றை போலீசார் மகஜரில் கைப்பற்றியபோது அந்த மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் கோவிந்தராஜ் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம் எனவும் பின் 6.00 மணியளவில் அதே இடத்திலிருந்து முத்துகுமார் எடுத்து ஆஜர் செய்த ஆர்.எஸ்.பதி. உருட்டு கட்டை ஒன்றை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள் அந்த மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் கோவிந்தராஜ் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம் எனவும் பின் 6.15 மணியளவில் அதே இடத்திலிருந்து ராஜா எடுத்து ஆஜர் செய்த ஆர்.எஸ்.பதி. உருட்டு கட்டை ஒன்றை போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள் அந்த மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் கோவிந்தராஜ் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம் எனவும் சொன்னால் தவறு. எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:37:53 +0530

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:37:59 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.84/2025

**Deposition of Witness for Prosecution PW 10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மாதவன் | Father's Name | : | ராமச்சந்திரன் |
| Village | : | தளிக்கோட்டைகாலணி | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 46 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 13th day of March 2026.**

**(A1 to A3, A5, A6 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தளிக்கோட்டை காலணியில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரிந்து வருகிறேன். 15.05.2009 ம் தேதி இரவு 7.00 மணியளவில் நானும் சசிகுமாரும் கருவாக்குறிச்சி தெற்கு தெரு SC Colony பஸ் ஸ்டாப் அருகே சென்று கொண்டிருந்தபோது சந்திரன் மகன் தமிழன் என்பவரை போலீசார் கைது செய்து அவரிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையவை 2 வது கையெழுத்து சசிகுமாருடையது. என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.15**. பின் 8.45 மணியளவில்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.13 14:38:07 +0530

தளிக்கோட்டை காலனி தெரு வரதராஜன் கொல்லை மூங்கில் குத்திலிருந்து தமிழன் எடுத்து ஆஜர் செய்த அருவாள் ஒன்றை போலீசார் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் சசிகுமார் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.16**. நான் கையெழுத்து செய்த பேப்பர்களில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, போலீசார் கையெழுத்து கேட்டதால் போட்டுக் கொடுத்தேன். போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 15.05.2009 ம் தேதி நானும் சசிகுமாரும் கருவாக்குறிச்சி தெற்கு தெரு SC Colony பஸ் ஸ்டாப் அருகே சென்று கொண்டிருந்தபோது தமிழன் என்பவரை போலீசார் பிடித்து விசாரித்து கைது செய்தார் எனவும் அவர் போலீசாரிடம் இரவு 7.00 மணியளவில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் எனவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதல் சாட்சியாகவும் சசிகுமார் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம் எனவும் இரவு 8.45 மணியளவில் தளிக்கோட்டை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:38:12 +0530

காலணி வரதராஜன் கொல்லை மூங்கில் குத்திலிருந்து தமிழன் என்பவரிடமிருந்து அருவாள் ஒன்றை போலீசார் மகஜரில் கைப்பற்றியபோது அந்த மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் சசிகுமார் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம் எனவும் சொன்னால் தவறு. எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து செய்த ஆவணங்களில் என்ன விபரம் இருந்தது என்று எனக்கு தெரியாது. என் முன்னிலையில் எந்த தடய பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரி. வழக்கு சம்மந்தப்பட்ட விபரம் எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:38:18 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.